பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 63

செவ்வாய்க்கிழமை
28 ஜனவரி 2025

தை 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056



## வடக்கில் மழை!

யாழ்ப்பாணம், ஜன. 28
வடக்கு மாகாணத்தில் இன்றுமுதல் அடுத்தசில தினங்களுக்கு மழையுடனான காலநிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம்நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:- 11

# ஸ்ரீலங்காவின் சுதந்திரதினம் வடமாகாணத்தின் கரிநாள்!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 28
ஸ்ரீலங்காவின் 77ஆவது சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியை வடமாகாணத்தின் கரிநாளாகக் கடைப்பிடிக்க முன்வருமாறு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று அழைப்பு விடுத்துள்ளனர். 11

## தமிழ்க் கட்சிகளின் பேச்சுவார்த்தை ரத்து

யாழ்ப்பாணம், ஜன. 28
புதிய அரசமைப்பு உருவாக்கம் மற்றும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முன்னெடுப்புகள் தொடர்பில், தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு இடையில் நேற்று மாலை நடைபெறவிருந்த கலந்துரையாடல் கைவிடப்பட்டுள்ளது. 11

## வாகன இறக்குமதிக்கு இன்றுமுதல் அனுமதி

கொழும்பு, ஜன. 28
இன்று செவ்வாய்க்கிழமை முதல் வாகனங்களின் இறக்குமதி மீண்டும் அனுமதிக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.
இது தொடர்பில் ஜனாதிபதி அநுரவால் நேற்று மாலை விசேட வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. அந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு 11

### வெளிநாட்டு ஆசைகாட்டி

## 68 லட்சம் ரூபா மோசடி ஆசிரியர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 28
வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஆசைகாட்டி மோசடியில் ஈடுபட்ட ஆசிரியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுக்கு அமைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
வெளிநாட்டுக்கு அனுப்புவதாக ஆசைகாட்டி உரும்பிராயைச் சேர்ந்த பெண்ணிடமிருந்து 68 11

## பிரிட்டன் அமைச்சர் கேத்ரின் இன்று யாழ்ப்பாணம் வருகை



யாழ்ப்பாணம், ஜன. 28
பிரிட்டனின் இந்தோ - பசுபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் கேத்ரின் வெஸ்ட் யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு இன்று நண்பகல் வருகைதரவுள்ளார்.
யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் இன்று நண்பகல் 1.30 11

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 28
ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடம் இருந்து 6 கிராம் ஐஸ் 11

### பேராசிரியர் ரகுராமுக்கு ஆதரவாக

## விரிவுரையாளர்கள் பணிப்புறக்கணிப்பு

### இன்றுமுதல் தொடர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி ரகுராமுக்கு ஆதரவாகவும், பதவி விலகிய அவருக்கு நீதிகோரியும் விரிவுரையாளர்கள் நேற்றுமுதல் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்குழுக்கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில் இடம்பெற்றபோதே 04

### இளையோரிடம் ஊடுருவியுள்ள

## போதையை எதிர்த்து போராட வாருங்கள்!

### பேராசிரியர் ரகுராம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 28
இன்றைய நாள்களில் மாணவர்களை மிகவும் அசிங்கமான முறையிலும் அருவருக்கத்தக்க விதமாகவும் போதைப்பொருள் சீரழித்துவருகின்றது. எனவே, 11




'எத்தினைதரம் கரியைப் பூசினாலும் அவைக்கு புத்தி வரேலையே'

## ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் எண்ணம் எமக்குக் கிடையாது!

### நாமல் ராஜபக்ச தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 28
பலவந்தமாக ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் எண்ணமில்லை. எமது ஆட்சியின்கீழ் அரசியற் பழிவாங்கலுக்கு முடிவுகட்டப்படும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்ட யோசித 11

### போலியான அமைப்பின் பெயரில்

## பல்கலை விவகாரத்தை மடைமாற்ற முயற்சிகள்

யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான மாணவர் ஒன்றியம் தற்போது இயங்குநிலையில் இல்லை. இவ்வாறிருக்கையில், 'அனைத்துப்பீட மாணவர் ஒன்றியம்' என்ற பெயரில் போலியான அமைப்பொன்றை 11

## மயக்கமருந்து தெளித்து 11½ பவுண் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 28
யாழ்ப்பாணம் தெல்லிப்பழைப் பகுதியில் மயக்கமருந்து தெளித்து நேற்று மாலை பதினொன்றரைப் பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்துவரும் வாரங்களில் நெல்லுக்கு நிர்ணயவிலை

## கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி தெரிவிப்பு



வவுனியா, ஜன.28

**அடுத்துவரும் வாரங்களில் நெல்லுக்கான நிர்ணய விலை தீர்மானிக்கப்பட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் ஊடாக நெல் கொள்வனவு செய்யப்படும் என்று கூட்டுறவுப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்தார். வவுனியாவில் நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகத் திறப்பு விழாவில் கலந்துகொண்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது பெரும்போக நெல் அறுவடை மேற்கொள்ளப்படுகின்றது. விவசாயிகளிடம் இருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகள் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தச் செயற்பாடு துரிதமாக நடைபெறவில்லை, நெல்லுக்கான நிர்ணய விலை இல்லை என்ற ஆதங்கங்கள் விவசாயிகளிடம் உள்ளன என்பதை நாம் அறிகின்றோம். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக அரசாங்கத்தால் நெல் கொள்வனவு செய்யப்படவில்லை. அதே நேரம் மோசடி வியாபாரத்தின் மூலம் சில வியாபாரிகளால் அதிகளவான நெல் கொள்வனவு செய்யப்பட்டது. மறுபுறத்தில் நெல் களஞ்சியங்கள் பல உரிய பராமரிப்பின்றிக் கைவிடப்பட்டுள்ளதால் நெல்லைக் கொள்வனவு செய்து சேமிக்க முடியாத நிலைமை உள்ளது. தூய இலங்கைத் திட்டத்தின் ஊடாகவும், மாவட்டச் செயலர்கள் மற்றும் ஏனைய திணைக்களங்கள், இராணுவம் ஆகியோரின் உதவியுடனும் கடந்தவாரமே அவற்றைச் சீரமைத்து முடித்துள்ளோம்.

எதிர்வரும் வாரங்களில் நெல்லுக்கான நிர்ணய விலை தீர்மானிக்கப்பட்டு கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் விவசாயிகள் அதுதொடர்பாகக் கவலை கொள்ளத் தேவையில்லை. அரசாங்கத்தால் ஒரு நியாயபூர்வமான விலை தீர்மானிக்கப்படும் என்பதுடன், பெருமளவிலான நெல்லைக் கொள்வனவுசெய்ய அரசாங்கம் தயாராக இருக்கின்றது - என்றார். (எ-110)



# அபிவிருத்தி லொத்தர் சபை முகவர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

அபிவிருத்தி லொத்தர் சபையின் வடமாகாண விற்பனை முகவர்களுடனான சந்திப்பு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இச்சந்திப்பில் அபிவிருத்தி லொத்தர் சபையால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. ஒவ்வொரு விற்பனை முகவரும் மேற்கொண்ட விற்பனையினை மீள்பார்வையிட்டு, தேர்தல் பிரிவு வாரியாக அதிக விற்பனையை மேற்கொண்ட விற்பனை முகவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. விற்பனை முகவர்கள் தாம் எதிர்கொள்ளும் சாதக, பாதக நிலைமைகளையும் குறிப்பிட்டனர். இந்தச் சந்திப்பில் லொத்தர் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.ஆர்.ஹேமந்த, லொத்தர் சபையின் பொதுமுகாமையாளர் அநுர ஜயரத்ன, மாவட்டத்தின் வலய முகாமையாளர்கள், விற்பனை மேம்படுத்தல் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-41-27)

# நீதிபதிகளுக்கு எதிரான அநாமதேயக் கடிதம்!

கொழும்பு, ஜன.28

நீதிபதிகள் தமது மெய்ப்பாதுகாவலர்களை தவறான செயற்பாடுகளுக்கு பயன்படுத்துகின்றனர் என்று நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு அநாமதேயக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இந்தக்கடிதம் ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்பட்டு நீதிபதிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

நீதிபதிகள் மது அருந்துவதற்கு தமது மெய்ப்பாதுகாவலர்களின் வீடுகளைப் பயன்படுத்துகின்றனர். சில நீதிபதிகள் கட்டளை அனுப்புவது போன்ற விடயங்களுக்கும் தமது மெய்ப்பாதுகாவலர்களைப் பயன்படுத்துகின்றனர். நீதிபதிகளுக்கு மோட்டார் சைக்கிள் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. ஜனாதிபதி, பிரதமர் போன்றோருக்கான பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளபோது நீதிபதிகளுக்கு எதற்காக மோட்டார் சைக்கிள் பொலிஸ் பாதுகாப்பு?

நீதிபதிகளின் வீடுகளில் நான்கு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நீதிபதிகள் வீட்டில் இல்லாத சந்தர்ப்பங்களிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீதும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் சிலர் பொலிஸாரை தமது இணைப்பாளர்களாகப் பயன்படுத்திவருகின்றனர் என்றுள்ளது. (எ-33-6)

# விமான நிறுவனங்களின் வரி நிலுவைகள் அறவீடு

*திட்டத்தை உருவாக்க அரசு முடிவு*

வரி செலுத்தாத விமான நிறுவனங்களிடம் இருந்து வரியை அறவிடுதற்கான வேலைத்திட்டம் உருவாக்கப்படும் என்று சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

சில விமான நிறுவனங்கள் சிவில் விமான சேவைகள் அதிகாரசபைக்குச் செலுத்த வேண்டிய வரியைச் செலுத்தவில்லை. அவற்றை அறவிடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். ஸ்ரீலங்கன் விமான சேவை சீர்குலைக்கப்பட்டே வழங்கப்பட்டது. அதை விற்பனை செய்யும் திட்டத்தைக் கைவிட்டுள்ளோம். ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான 3 விமானங்கள் இயந்திரங்கள் இன்றி 3 ஆண்டுகளாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்காக மாதாந்தம் 9 லட்சம் ரூபாவைக் கடந்த அரசாங்கம் செலுத்தியுள்ளது. அந்த விமானங்களில் ஒரு விமானத்துக்கு இயந்திரம் பொருத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஏனைய இரண்டையும் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் செயற்படுத்த எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33)

# ஒருங்கிணைப்புக்குழு அலுவலகம் வவுனியாவில் நேற்றுத் திறப்பு



வவுனியா, ஜன.28

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் நேற்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவால் திறக்கப்பட்டது.

வவுனியா தெற்கு பிரதேச செயலக வளாகத்தில் உள்ள கட்டடத்திலேயே இந்த அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற நாள்கள் தவிர்ந்த தினங்களில் மக்கள் தங்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்த அலுவலகத்தில் ஒழுங்கமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-110)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 27.01.2025 | திங்கட்கிழமை | 0437 | L | 5 1 0 3 7 9 |

**Super Ball DLB**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 27.01.2025 | திங்கட்கிழமை | 2703 | G | 31 34 38 52 |

**சனிதா DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 27.01.2025 | திங்கட்கிழமை | G | 03 33 62 74 | 4864 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் | | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 27.01.2025 | திங்கட்கிழமை | கடகம் | 07 09 20 27 | 4415 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 27.01.2025 | திங்கட்கிழமை | V | 25 | 07 21 58 69 | 1879 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 27.01.2025 | திங்கட்கிழமை | X | 18 66 69 70 | 2529 |

**JAYODA DLB**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 27.01.2025 | திங்கட்கிழமை | P | 35 43 62 65 | 2098 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரம்பின் அறிவிப்பால் இலங்கைக்கும் சிக்கல்

**கொழும்பு, ஜன.28**

**அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வெளிநாடுகளுக்கான உதவித்திட்டங்களை நிறுத்தும் அறிவிப்பால் இலங்கைக்கும் தாக்கம் ஏற்படவுள்ளது.**

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றத்தைத் தொடர்ந்து வெளிநாடுகளுக்கான உதவித்திட்டங்களை 90 நாள்களுக்கு தற்காலிகமாக நிறுத்தியுள்ளார். வெளிநாடுகளுக்கான உதவித்திட்டங்களை 85 நாள்களுக்குள் மீளாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.
இந்தத் தீர்மானத்தால் அமெரிக்காவின் யு.எஸ். எயிட் முகவரமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்படும் உதவித்திட்டங்கள் தடைப்படும் வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அதனால் இலங்கையும் பாதிப்புக்களை எதிர்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
அதேவேளை, அமெரிக்கா 1956ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கும் பல்வேறு உதவித்திட்டங்களுக்காக 52 பில்லியன் டொலரை வழங்கியுள்ளது என்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (எ-33-6)

## டெங்கு பரவும் வேகம் சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, ஜன.28
நாடளாவிய ரீதியில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன. ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 4 ஆயிரத்து 44 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.
தற்போது நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக டெங்குத் தொற்றின் வேகம் அதிகரித்துள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் இனங்காணப்படும் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான உயர்வு ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 182 பேர் டெங்குத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதேவேளை, நாடளாவிய ரீதியில் இந்த ஆண்டு டெங்குத் தொற்றால் இருவர் உயிரிழந்துள்ளனர்.
டெங்குத் தொற்று அபாயம்மிக்க பகுதிகளாக 19 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் அடையாளமிடப்பட்டுள்ளன. பொதுமக்கள் தாம் வாழும் சூழலைத் தூய்மையாகப் பேண வேண்டும் என்று சுகாதாரத் தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-33)

## வாகன இறக்குமதியின் மூலம் அதிக வருமானம் ஈட்ட முடிவு

கொழும்பு, ஜன.28
வாகன இறக்குமதி வரி மூலம் கூடுதலான பணத்தை ஈட்டுவதற்கு அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. நடப்பாண்டில் வாகன இறக்குமதி வரி மூலம் 450 பில்லியன் ரூபாவைத் திரட்டுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (எ-33-6)

## கைத்தொழில் அமைச்சரிடம் 100 மில். கோரும் தென்னக்கோன்

கொழும்பு, ஜன.28
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் சமந்தா வித்தியாரத்னவுக்கு எதிராக முன்னாள் மத்திய மாகாண ஆளுநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் 100 மில்லியன் ரூபா இழப்பீடு கோரி சட்டத்தரணி ஊடாக கோரிக்கைக் கடிதம் அனுப்பியுள்ளார்.
சட்டவிரோதமான முறையில் காணி அபகரித்தேன் என்று தன் பெயரைக் குறிப்பிட்டு அமைச்சர் சமந்தா வித்தியாரத்ன உரையாற்றியுள்ளார் என்றும், அதனால் தனது நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது என்றும் கீர்த்தி தென்னக்கோன் அனுப்பிய கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அமைச்சர் 14 நாள்களுக்குள் தனது சொந்தப்பணத்தில் 100 மில்லியன் ரூபா இழப்பீடு வழங்க வேண்டுமெனவும் தவறும் பட்சத்தில் வட்டி, நீதிமன்றச் செலவு என்பனவும் சட்டரீதியாகப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-33-6)

## துப்பாக்கிச் சூடுகள் 84 பேர் கைது



நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற குற்றத் தடுப்பு விசேட சோதனை நடவடிக்கைகளில், குற்றச்செயல்களுடன் நேரடியாகத் தொடர்புடைய 249 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 4 ஆயிரத்து 20 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார். கடந்த நாள்களில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 84 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேநேரம் ரி 56 ரகத் துப்பாக்கிகள் மூன்றும், கைத்துப்பாக்கிகள் ஐந்தும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33)

## அரசியல் தலையீடுகள் இன்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு!

கொழும்பு, ஜன.28
அரசியல் தலையீடு இன்றி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.
அந்நியச் செலாவணியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பிரதான துறைகள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறைகளாகும். இவை இரண்டையும் குறுகிய காலத்தில் கட்டியெழுப்புவதே எமது எதிர்பார்ப்பாகும். வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கையர்கள் வருடாந்தம் 6 ஆயிரத்து 500 மில்லியன் டொலர்வரை அனுப்புகின்றனர். சுற்றுலாத்துறை ஊடாக அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொள்ளும் அளவும் அதிகரித்துள்ளது.
வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்களை நியாயமாகவும், அரசியல் தலையீடுகள் இன்றியும், குறைந்தளவு பணச் செலவிலும் ஏற்படுத்துவதே எமது இலக்காகும். சில சந்தர்ப்பங்களில் சட்டதிட்டங்களை மாற்றவேண்டி ஏற்படும். அதேநேரம் தேசிய சுற்றுலா ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-33)




யாழ்ப்பாணக் கம்பஸில இப்ப கொஞ்சநாளா நடக்கிறதைப் பாக்கேக்க 'என்னவோ நடக்குது மர்மமா இருக்குது' எண்டு பாடோணும் போல கிடக்குது. அந்தளவுக்கு என்னென்னவோ எல்லாம் நடக்குதாம். என்னதான் திசைகாட்டிக்காரர் தங்களைச் சுத்தமான பத்தரை மாற்றுத்தங்கம் எண்டு வெளிவேசம் போட்டாலும், அவையும் சராசரி அரசியல்வாதியள்தான். தங்களுக்கு எதிரான ஆக்களுக்கு நேரடியா தாங்கள் குடைச்சல் குடுக்காட்டியும், தங்கட ஏவுதடியளை வைச்சு ஏதும் சொறிஞ்சு கிறிஞ்சு அவையை அங்க இருந்தே அப்புறப்படுத்துறதுதான் திசைகாட்டிக்காரரின்ர தந்திரம். இப்ப யாழ்ப்பாணக் கம்பஸில துணைவேந்தரா இருக்கிறவருக்கு அதே கம்பஸில இருக்கிற சிலர் கடும் புகைச்சல். அவர் துணைவேந்தரா வரக்கூடாது எண்டதுக்காகவே அவையள் கொஞ்சக்காலத்துக்கு முதல் உள்ளடி வேலையெல்லாம் பார்த்தவை. பிறகு தங்கட ராஜதந்திரம் ஒண்டும் பலிக்காமல் போன கவலையில பம்மிக்கொண்டு இருந்தவை. இப்ப அந்த எதிர்க்கன்னையில இருக்கிற சிலருக்கு திசைகாட்டிக்காரர் 'காத்தடிச்சு' உசார் குடுத்திருக்கினம். அந்த உசாரில அவையள் தங்களுக்கு கீழ இருக்கிற வேறையாக்களையும் சேர்த்துக்கொண்டு துணைவேந்தருக்கு தலையிடி குடுக்க வெளிக்கிட்டிருக்கினம்.

யாழ்ப்பாணக் கம்பஸில கலைப்பீடாதிபதியா இருக்கிறவர் கடும் கெட்டிக்காரர். பொதுவா நிர்வாகத்திட்ட நல்லபேர் எடுக்கிறவைக்கு கம்பஸ் பெடியளிட்ட மதிப்பு இருக்கிறேலை. ஆனால் இவருக்கு பெடியளும் சப்போர்ட். அப்பிடிப்பட்டவர் கொஞ்சநாளைக்கு முதல் ஒருகூட்டத்தில திசைகாட்டிக்காரரின்ர ஓட்டுமாட்டுகளையெல்லாம் சொல்லிக்கிழிச்சவர். அதுக்குப் பிறகு அவரையும் அந்தப் பதவியில இருக்கவிடக்கூடாது எண்டு திசைகாட்டிக்காரர் தங்கட கைப்பிள்ளையளுக்கு ஓர்டர் போட்டிருக்கினம். அதாலதான் துணை வேந்தருக்கும் குடைச்சல் குடுக்கிற அதேநேரம் கலைப்பீடாதிபதிக்கும் சிக்கலை உண்டாக்கிற மாதிரி ஒரு பிளான் போட்டிருக்கினம். அதுதான் 'போதைப்பொருள் பாவிச்சவைக்குப் போடுப்பட்ட வகுப்புத்தடையை நிப்பாட்டவேணும்' எண்டு நாலு பெடியள் இருந்த உண்ணாவிரத நாடகம். அப்பிடிப் பெடியள் உண்ணாவிரதம் இருந்தால், அதை நிப்பாட்டும் வரைக்கும் துணைவேந்தருக்குத் தலையிடிதான். வகுப்புத்தடையை எடுத்தால்தான் அந்த உண்ணாவிரதம் நிக்கும். ஆனால் அப்பிடி வகுப்புத்தடையை எடுத்தால், அது கலைப்பீடாதிபதி இவ்வளவு கஷ்டப்பட்டு செய்த நல்லவேலையளையெல்லாம் நாசமாக்கி, அவருக்கு வெறுப்பு வந்து பதவியையே தூக்கியெறிஞ்சு போடுவார். அவை போட்ட பிளான்படியே எல்லாம் நடந்தது. ஆனால் அவை எதிர்பார்க்காத ஒண்டும் நடந்ததுதான் பெருந்திருப்பம்.

வழக்கமா கம்பஸ் பெடியளுக்கு பிரச்சினை எண்டாத்தான் கம்பஸ் பெடியள் போராட்டம் நடத்திறவை. ஆனால் முதல்முறையா ஒரு லெக்சரருக்கு (கலைப்பீடாதிபதிக்கு) சப்போர்ட்டா ஊடகச் சந்திப்பு வைக்கிறதுக்கும், அவருக்கு நீதி கிடைக்காட்டி போராட்டம் நடத்தப்போறம் எண்டும் கலைப்பீட மாணவர் ஒன்றியம் சொல்லியிருக்கு. அதுவும் தங்கட சில பெடியள் சம்பந்தப்பட்ட இந்தவிசயத்தில, அவையளின்ர பக்கம் நிக்காமல் கலைப்பீடாதிபதிக்கு சப்போர்ட்டா கலைப்பீட மாணவர் ஒன்றியம் நிக்குதெண்டால், பிழை எங்க இருக்கு எண்டது எல்லாருக்கும் தெரிஞ்சிருக்கும். இப்பிடி கம்பஸ் பெடியள் எடுத்த முடிவே கலைப்பீடாதிபதிக்கு இவ்வளவுநாளும் அவர் பாடுபட்டதுக்கு கிடைச்ச பெரிய பரிசுதான். ஆயிரம் விருதுகள், பட்டங்கள் கிடைச்சாலும் இப்பிடியொரு சம்பவம், சப்போர்ட் ஆருக்குக் கிடைக்கும்? கலைப்பீடாதிபதிக்கு அது கிடைச்சிருக்கே. இதைவிட வேறையென்ன அவருக்கு வேணும்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும்.

**இடபம்:** சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். குடும்பம் தொடர்பான முடிவுகள் எடுப்பதில் பொறுமை அவசியம். செரிமானப் பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. சிலருக்குப் பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** எந்த ஒரு முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும்.

**கடகம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும் என்பதால், கையிருப்பு கரையும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

**சிம்மம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். பிள்ளைகளால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். வெளியிடங்களில் உணவு விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** அன்றாடப் பணிகளிலும்கூட கூடுதல் கவனம் தேவை. தாய்வழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டி இருக்கும் கணவன் மனைவிக்கிடையே வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**துலாம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் திடீர் செலவுகள் ஏற்படும்.


**விருச்சிகம்:** உற்சாகமான நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத் துணை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்.

**மகரம்:** அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக் கூடும். தந்தைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும்.

**கும்பம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும்.

**மீனம்:** உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவிகேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும் அனுசரித்துச் செல்வது நல்லது.





# வெள்ளநீர் தேங்குவதால் போக்குவரத்தில் சிரமம்!

**யாழ்ப்பாணம், ஜன.28**

**வரணி மாசேரியையும், வடமராட்சி கிழக்கு குடத்தனையையும் இணைக்கும் வீதியில் மழைக் காலங்களில் வெள்ளம் தேங்குவதால் பொதுமக்கள் போக்குவரத்துச் செய்வதில் மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

வடமராட்சி மற்றும் தென்மராட்சியை இணைக்கும் இந்த வீதியைப் பெருமளவான மக்கள் பயன்படுத்துகின்றனர். நீண்டகாலமாகச் சீரமைக்கப்படாதுள்ள இந்த வீதியில் மழைக்காலங்களில் வெள்ளநீர் தேங்கியிருப்பதால் போக்குவரத்தில் நெருக்கடிகளைச் சந்திக்கவேண்டியுள்ளது என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த வீதியைச்சீரமைத்து போக்குவரத்தில் காணப்படும் நெருக்கடிகளைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஏ-159)

# திருவாசகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.28

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய பிரதான மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணிக்கவாசகர் சுவாமி களின் குரு வணக்கத்தைத் தொடர்ந்து சைவப்புலவர் பிரசங்கபூஷணம் பொன் சந்திரவேல் 'மாணிக்கவாசகரும் சென்னிப் பத்தும்' என்றும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஏ-இ)

## விரிவுரையாளர்கள்...

தொடர் பணிப்புறக்கணிப்புத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நேற்றுமாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மீறல்களிலும், வன்முறைகளிலும், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தினைப் பாதிக்கும் வகையிலும், உடைமைச் சேதங்களை விளைவிப்பதிலும் சீரழிவு மிக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராகப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் கடந்த காலத்திலே உறுதியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியுள்ளமை தொடர்பில் இன்று (நேற்று) இடம்பெற்ற ஆசிரியர் சங்கத்தின் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

திட்டமிட்ட முறையில் விசாரணைகளிலே தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தண்டனைகளில் இருந்து தப்பித்துச் செல்ல நிர்வாகம் வழிசமைத்துக் கொடுப்பதாகவும் இதன்போது கருத்துக்கள் வெளியிடப்பட்டன. கூட்டத்தின் இறுதியில் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இன்று (நேற்று) திங்கட்கிழமை பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஓர் அடையாள வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடுவது எனவும், நாளை (இன்று) முதல் தொடர் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடுவதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**கோரிக்கைகளாவன,**

மோசமான செயல்களிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என இராஜினாமா செய்த கலைப்பீடாதிபதி பேராசிரியர்ரகுராம் முன்வைத்த கோரிக்கை உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

பேராசிரியர் ரகுராம் தனது பதவி விலகலினை வாபஸ் பெற்று மீளவும் பீடாதிபதிப் பொறுப்பினை ஏற்பதற்கு உரிய ஒரு சூழலினைப் பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்த வேண்டும். மாணவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்திலே மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக திரும்பப் பெறப்படல் வேண்டும்.

மோசமான செயல்களிலே ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் உறுதியாக இருக்கும் போதிலும் அவற்றினைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வேண்டுமென்றே கால தாமதங்களை ஏற்படுத்தல், வேண்டுமென்றே நிர்வாகத் தவறுகளை இழைத்தல் போன்ற செயன்முறைகள் மூலம் மீறல்களிலே ஈடுபட்ட மாணவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கு நிர்வாகம் வழிசமைத்துக் கொடுக்கும் போக்கு உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்படல் வேண்டும்.

இரண்டு மாணவர்கள் கணித புள்ளிவிபரவியல் துறையின் வாயிலில் இருந்த பூட்டினை உடைத்தமை தொடர்பிலே இடம்பெற்ற விசாரணையினை வேண்டுமென்றே தாமதமடையச் செய்த பல்கலைக்கழக நிர்வாகிகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும். அதேபோன்று கலைப் பீடத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை வேண்டுமென்றே இழுத்தடிப்போர் மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலையீட்டினையும் கோருவதற்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

கலைப்பீடத்திலும், விஞ்ஞானப் பீடத்திலும் மோசமான செயல்களிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வதிலிருந்து தவறிய பல்கலைக்கழகப் பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் மீது எமது ஆசிரியர் சங்கம் நம்பிக்கையினை இழந்துள்ளது. எனவே, எல்லா வெளிவாரி உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்யவேண்டும். புதிய உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்பட வேண்டும். இதுதொடர்பான சங்கத்தின் விண்ணப்பம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், உயர்கல்வி அமைச்சுக்கும் அனுப்பிவைக்கப்படும்.

மேற்கூறிய ஐந்து கோரிக்கைகளையும் உள்ளடக்கிய கடிதம் ஒன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கும், எல்லாப் பீடாதிபதிகளுக்கும் ஆசிரியர் சங்கத்தினால் இன்றைய கூட்டத்திலே மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு அமைய அனுப்பிவைக்கப்பட்டது - என்றுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

உண்மை மனிதனுக்குச் சொந்தம்.
பிழை அவன் காலத்திற்குச் சொந்தம்.

– கதே –

# தற்சார்பின் அவசியநிலை உணரப்படுவது எப்போது?

இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள், சர்வதேசத் தரத்தில் இல்லை என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றார் கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி. இந்தப் பின்னடைவு நிலையால், எதிர் காலத்தில் இலங்கைக்குள் மீன்கள் இறக்குமதி செய்யப் படலாம் என்றும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஓர் அரசாங்கமாகவும், ஓர் அமைச்சராகவும் கூனிக்குறுகி வெட்கப்பட்டு வெளிப்படுத்த வேண்டிய கருத்தை, வழக்கமான எதிர்க்கட்சி மனோநிலையில் இருந்து சர்வசாதாரணமாகக் கூறிவிட்டுக் கடந்திருக்கின்றார் அமைச்சர்.

அரசாங்கங்களைத் தொடர்ச்சியாக விமர்சித்து விமர்சித்துப் பழக்கப்பட்டதால், தேசிய மக்கள் சக்தியினர் பலர் அதே மனோநிலையில் - மாறாத உடல்மொழியில்தான் கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அதன் தொடர்ச்சியாகவே, இலங்கையின் மீன் உற்பத்தியில் (ஏற்றுமதியில்) உள்ள குறைபாடுகள் தொடர்பில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி வெளிப்படுத்திய கருத்துகளையும் பார்க்கவேண்டியுள்ளது. இலங்கையின் மீன் ஏற்றுமதி உரிய தரத்தில் இல்லையென்றால், அந்தத் தரநிலையை மேம்படுத்துவதற்காகத்தான் மக்கள் உங்களைத் தெரிந்திருக்கின்றார்களே தவிர, ‘அது இல்லை’, ‘இது இல்லை’, ‘அவ்வாறு செய்ய முடியாது’, ‘இது சிரமமானது’ என்ற எதிர்மறை எண்ணங்களை நாட்டுக்குள் சிந்தவிட்டுக்கொண்டிருப்பதற்கு அல்ல. இந்தப் புரிதலை அரசாங்கத்தினர் முதலில் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

இலங்கையின் மீன் ஏற்றுமதியில் பிரச்சினைகளும் குறைபாடுகளும் உள்ளன என்றால், அது சாதாரண விடயமல்ல. கால்நடை வளர்ப்பு, மீன்பிடி விவசாயம் என்பனவற்றில் தன்னிறைவு காணக்கூடிய அத்தனை சாத்தியங்களும் இந்தத் தீவில் அதிகமுள்ளன. தன்னிறைவு காண்பது மட்டுமல்ல, நாட்டின் தேசிய வருவாயை மேம்படுத்துவதில் இந்த மூன்று விடயங்களும் முதன்மைப் புள்ளிகள். ‘தற்சார்புப் பொருளாதாரம்’, ’இறக்குமதிக் குறைப்பு’ ஆகியவற்றை தம் பிரதான வாக்குறுதிகளாகவும், அறிவிக்கப்படாத கொள்கைகளாகவும் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சியில் ஏறி இத்தனை வாரங்களில், மேற்படி துறைகளை மேம்படுத்தக்கூடிய அடித் தளத்தைப் பலமாக அமைத்திருக்கவேண்டும். ஆனால், முறைப்பாடுகளும், விரல் நீட்டல்களும் மட்டுமே அவர்களிடம் எஞ்சியிருப்பது உண்மையில் வெட்கக் கேடானது.

இலங்கையின் கடல்வளம் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் ஏற்கனவே சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றது. வடக்குக் கடற்பரப்பில் அபகரிக்கப்படுவது இலங்கையின் மீன்வளம் மட்டுமல்ல, ஈழ மீனவர்களின் வாழ்வாதாரமும்தான். இவ்வாறிருக்கையில், மீன்களை இறக்குமதி செய்வது என்ற முடிவை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எடுக்குமானால், அவர்களை இலங்கையின் மீனவசமூகம் ஒருபோதும் மன்னிக்காது. இலங்கையில் மீன்களின் ஏற்றுமதித் தரத்தை மேம்படுத்தி, உள்நாட்டுச்சந்தையையும், வெளிநாட்டுச் சந்தையையும் ஈழ மீனவர்களுக்காக அகலத்திறந்து விடுவதே அரசுக்கு அழகு. அதைத்தான் இந்த நாட்டின் மக்களும் மீனவர்களும் எதிர்பார்க்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய தேவையான ஒன்றை (உரம்) இறக்குமதி செய்யாமல் மக்களின் கோபத்துக்கு ஆளானார். தற்போதைய ஜனாதிபதி அநுர தேவையற்ற இறக்குமதிகளை (உப்பு, மீன்) அனுமதித்து மக்களின் கோபத்துக்கு ஆளாகப்போகின்றார். அவ்வளவே!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



# டிஜிற்றல் தரவு சேகரிக்க 2,300 நிலையங்கள்



கொழும்பு, ஜன.28

**டிஜிற்றல் அடையாள அட்டைக்குத் தேவையான தரவுகளைப் பெறுவதற்காக நாடு முழுவதும் 2 ஆயிரத்து 300 நிலையங்கள் நிறுவப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

டிஜிற்றல் அடையாள அட்டையை வரி செலுத்துவதற்கும், வங்கிப் பரிவர்த்தனைகள் முதல் அனைத்தையும் செய்யப் பயன்படுத்தவும் முடியும்.
இந்தத் திட்டத்துக்காக ஆயிரம் கோடி ரூபா உதவி வழங்க இந்தியா ஒப்புக்கொண்டுள்ளது. தரவுகள் திருடப்படும் என்பது பொய். இலங்கையின் மிகச்சிறந்த தரவு அறிவியல் நிபுணர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# மீனவர்களை விடுவிக்குமாறு தமிழக முதலமைச்சர் கடிதம்

சென்னை, ஜன.28
இலங்கைக் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 34 பேரையும் விடுவிக்கக்கோரி தமிழக முதலமைச்சர், இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். அதேவேளை இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள 34 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-இ)



# காலி சிறை மோதல் விசாரணைக்கு குழு அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன.28
காலிச் சிறையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் நடந்த மோதல் சம்பவத்தில் கைதிகள் நால்வர் காயமடைந்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள உதவிச் சிறைச்சாலை அத்தியட்சகர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# விசாரணை செய்யப்படவுள்ள வீட்டுத்திட்ட முறைகேடுகள்

கொழும்பு, ஜன.28
கடந்த காலங்களில் இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பகிர்ந்தளிக்கும் போது இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும் என்று பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்புப் பிரதி அமைச்சர் சு.பிரதீப் தெரிவித்துள்ளார். (எ-இ)



# யோஷிதவுக்கு பிணை

கொழும்பு, ஜன.28
சட்டவிரோதமாகச் சொத்து சேர்த்தமை தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யோஷித ராஜபக்சவுக்கு நீதிமன்று நேற்று பிணை அனுமதி வழங்கியுள்ளது.
நேற்று நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டபோது 50 மில்லியன் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது. 34 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய காணி ஒன்றைக் கொள்வனவு செய்தமை தொடர்பாகவே யோஷித ராஜபக்சவின் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - தை - 15
29.01.2025
சுபநேரம் : 05.06 - 06.36
ராகுகாலம் : 12.36 - 02.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சின்னஞ்சூட்டும் நிகழ்வு!

கொடிகாமம், ஜன. 28
இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தில் மாணவத்தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி நிர்வாகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் சு.ஸ்ரீகுமரன் பங்கேற்றார். (ச- 25-22, 159)

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்துக்கு அமரர் சந்தியாம்பிள்ளை பிரான்சிஸ் சேவியரின் ஞாபகார்த்தமாக ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் பிரதி அதிபரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டன. (ச-41-17)



## பாடநூல்கள் கையளிப்பு


யாழ்ப்பாணம், ஜன.28
அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வினாவிடை பாடநூல்கள் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன.

அனலைதீவு கலாசார ஒன்றியம் மற்றும் லண்டன் ஒன்றியம் ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளின் கடந்தகால வினாத்தாள்கள் அடங்கிய புத்தகங்களை வழங்கிவைத்தன. (ச-25, 9)

## பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜன.28
யாழ்.மாவட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் கழகத் தெரிவுக்கான பயிற்சிப்பட்டறை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மாவட்ட மேலதிக செயலர் க.சிறிமோகனன், உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி மற்றும் தேசிய பரா ஒலிம்பிக் குழுவின் உப தலைவர் பிரியந்த பீரிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,9)







வரணி மத்திய கல்லூரியின் பரிசில்நாள் நிகழ்வு, பிரதி அதிபர் தெ.செந்தூரன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-25, 159)



'கல்விக்குக் கரம் கொடுப்போம்' செயற்றிட்டத்தின் கீழ், 'ஹெல்ப் போ சிமைல்' அமைப்பின் ஊடாக ஜேர்மனிவாழ் தமிழ்மக்களின் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு, மாங்குளம், துணுக்காய், கற்குவாரி ஆகிய கிராமங்களிலுள்ள பொருளாதாரம் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25)



### கர்நாடக சங்கீதம்

# அமெ.மிஷன்த.க.பாடசாலை மாணவன் தேசியத்தில் சாதனை

யாழ்ப்பாணம், ஜன. 28
தேசிய ரீதியில் கடந்த வருடம் இடம்பெற்ற கர்நாடக சங்கீதப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் யாழ்.அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் வ.ஜக்சன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். அவரைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலைச் சமூகத்தால் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. (ச-25, 27)



நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பினின் ஏற்பாட்டில், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவர்களால் நெடுந்தீவு மருத்துவமனைக்கு புல்லுவெட்டும் இயந்திரம், எரிபொருள், குப்பைத்தொட்டி மற்றும் அலுவலக உபகரணங்கள் என்பன கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டன. (ச- 25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு 12 . 06 . 1953



உதிர்வு 24 . 01 . 2025

## செல்வி ஹீமராணி மாசிலாமணி

**(ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர்)**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு 6& 8 1/5 ஹெம்டன் லேன், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட ஹீமராணி மாசிலாமணி அவர்கள் கடந்த 24.01.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாசிலாமணி - பத்மலோசனி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - லட்சுமி தம்பதியரின் பாசமிகு பேர்த்தியும், உமாநீலவேணி, காலஞ்சென்ற ரகுந்திரநாத் மற்றும் குமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருவாரூரன், காலஞ்சென்ற ஜெயந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற பத்மநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.01.2025) செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணியளவில் அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நாளை (29.01.2025) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பிற்பகல் 3.00 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**கொழும்பு 6 & 8 1/5**
**ஹெம்டன் லேன்,**
**வெள்ளவத்தை.**

**தகவல் : குடும்பத்தினர்**
**077 925 7018,**
**076 898 2723**

(CS/57340) J-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 06 . 1943



மறைவு 23 . 01 . 2025

## அந்தோனியாப்பிள்ளை கிறேஸ் வின்சன்ற் (றஞ்சி)

**(இளைப்பாறிய St.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை ஆசிரியை)**

35A, ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனியாப்பிள்ளை கிறேஸ் வின்சன்ற் அவர்கள் கடந்த 23.01.2025 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சன்ஜோன் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மனவல் வின்சன்ற் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மத்தீனா, மத்தியாஸ், விக்ரோறியா, மரியநாயகம், வேதநாயகம், அருமைநாயகம், மேரி பெனிக்னா மற்றும் றெஜினா (லில்லி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, அலோசியஸ், பாக்கியம், டோமினிக், குணம் மற்றும் மகேஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.01.2025) செவ்வாய்க்கிழமை பி.ப 02.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 3.00 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் https://youtube.com/live/gyqG!Aqo_cM?feature=share என்னும் Link இல் பார்வையிடலாம்.

**35A ஓடக்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**றமேஷ் (பெறாமகன்) - 076 739 1019**
**சுரேஷ் (பெறாமகன்) - 074 064 0124**

(CS/57341) J-1

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## சண்முகலிங்கம் லதுர்ஜிகாந் (லது)

**(வதனி ஜுவல்லரி, கொடிகாமம்)**



**மண்ணில்**
**16.08.1976**

**விண்ணகம்**
**14.01.2010**

**திதி:- சதுர்த்தசி**



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வத்தின் நிழலில்
சங்கமமாகி விட்டவரே!
உமைப் பிரிந்து நாம் - பதினைந்து ஆண்டுகள்
கடந்து உளம் வருந்தும் வேளையில்
மீளாத்துயர் போக்க மீண்டும்
வருவாயோ எம் உயிரே!

**பொற்றொழிலாளர் வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

(CS/57339) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை சோதிநாயகிக்கு 'அன்பே சிவம்' விருது

யாழ்ப்பாணம், ஜன. 28

ஆண்டுதோறும் மகா சிவராத்திரியை முன்னிட்டு, அகில இலங்கை சைவமகா சபையால் வழங்கப்பட்டுவரும், 2024 ஆம் ஆண்டுக்கான 'அன்பே சிவம்' விருது, சமய சமூக சேவகி அன்னை சோதிநாயகி குருசாமிக்கு வழங்கப்பட வுள்ளது.

இந்த நிகழ்வு பெப்ரவரி 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தைப்பூச நன்னா ளன்று இடம்பெறவுள்ளது.

(ச-25, 66,125)

## ரணில் இருக்கும்போது மக்களுக்குப் பயமேன்?

### வஜிர தெரிவிப்பு

இந்த நாட்டைப் பாதுகாக்கக்கூடிய ஒரேயொரு தேசியத் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மட்டுமே. எதிர்வரும் ஏப்ரல், மே மாதமளவில் நாட்டுமக்கள் மறுபடியும் தெருவுக்கு வருவர். அப்போதும் ரணில் இருக்கப்பய மேன்? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபே வர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி நாட்டை ஆளும்போது 77 வருடகால சாபம் என்றார்கள். ஆனால் தேங்காய் விலை 100 ரூபாவாக இருந்தது. தற்போது தேங்காய் விலை 240 ரூபாவாக வுள்ளது. ரணில் ஆட்சியில் குரங்கும் இருந்தது தேங்காயும் இருந்தது. அரிசி விலையும் உரியவகையில் பேணப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவும் நள்ளிரவு 12 மணிவரை வேலை செய்வார். ஆனால் அதனை ஊடகங்கள் முன்வந்து கூறுவதில்லை. சுற்றுலாத்துறைக்குப் பொருத்தமான நாடாக 2018 இல் இலங்கை இருந்தது. இதனைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடத்தப்பட்டது- என்றார்.

(ச-44)



## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 11 . 1947



மறைவு 14 . 01 . 2017

அமரர்

**வைத்திய கலாநிதி Dr. குமாரசாமி மகேசன்**

(முன்னாள் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர், தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தின் பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம்)

பூவுலகினை விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கி
சென்று ஆண்டுகள் எட்டு ஆனது ஐயா
நீங்கள் எல்லோர் மீது கொண்ட அன்பையும்
பண்பையும் என்றும் மறக்க முடியாது
உங்கள் நினைவுகள் என்றும்.

(CS/57343) J-1

நண்பர்கள்

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 03 . 1948



உதிர்வு 20 . 01 . 2025

**சோதிமலர் நமசிவாயம் (ராணி)**

தெல்லிப்பளை கிழக்கு விராங்கொடையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சோதிமலர் நமசிவாயம் கடந்த 20.01.2025 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நமசிவாயம் அவர்களின் அன்பு மனைவியும், சசிகலா, சந்திரகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2025) புதன்கிழமை முற்பகல் 09.00 - 11.15 (இலங்கை நேரம் பிற்பகல் 01.30 - 3.45) மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக (பிற்பகல் 1.30 - 2.30) இலங்கை நேரம் (பி.ப 6.00 - 7.00) மணியளவில் 739 Rue Marcel Paul 94500 Champigny - Sur - Marne ற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தெல்லிப்பளை கிழக்கு,
விராங்கொடை. (CS/57316) J-1

தகவல் :
கு.தர்மபாலன் (பபா) - மருமகன்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 05 . 1959



மறைவு 29 . 12 . 2024

அமரர் **சபாநாயகம் சிவகுமார்**

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், கொமஷல் வங்கி, யாழ்ப்பாணம்)

எமது இல்லத்தில் இன்று (28.01.2025) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்காக பிரார்த்திக்குமாறும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறும், உச்சஅன்பு மேலிட உங்களை உரிமையோடு அழைக்கின்றோம்.

இவ்வேளையில், எங்கள் ஆருயிர் தோன்றலரின் துயரச் செய்தி கேட்டு இற்றைவரை எமக்கு பக்க துணையாக நின்று பலவிதமாகவும் எமது துயரில் பங்கேற்று, பதாகைகள், இரங்கலுரைகள், அனுதாபச் செய்திகள் அடங்கலாக அனைத்துவிடயங்களிலும் அளப்பரிய உதவிகளைச் செய்து எமது துயரைப் பகிர்ந்து கொண்ட உங்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்ந்த உளமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

(CR/44191) J-1

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், [illegible]

## பாஷாண உத்வாசன சபீண்டீகரண அழைப்பு

அன்னை மடியில் 31 . 12 . 1963



ஆண்டவன் அடியில் 20 . 01 . 2025

கடந்த 20.01.2025 திங்கட்கிழமை அன்று
இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **திருஞானசம்பந்தக் குருக்கள் மாணிக்கவாசகர் ஐயா**

(ஓய்வுநிலை உள்ளூராட்சி மன்ற அலுவலர், கரவெட்டி, பருத்தித்துறை, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, யாழ்ப்பாண மாநகரசபை)

அவர்களின் பாஷாண உத்வாசனக் (கல்லெடுப்பு) கிரியைகள் நாளை (29.01.2025) புதன்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு இடம்பெறும். நாளை மறுதினம் (30.01.2025) வியாழக்கிழமை சபீண்டீ கரண கிரியைகள் நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று
வருகைதருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சந்நிதி வீதி,
[illegible]சுவேலி. (CS/57344) J-1

குடும்பத்தினர்.
077 978 9680



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வி நிறுவன சபைக்கு யாழிலிருந்து இருவர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜன. 28

இலங்கையின் தேசிய கல்வி நிறுவன சபைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து இருந்து இருவரை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நியமித்துள்ளார்.

அதன்படி இலங்கையின் தேசிய கல்வி நிறுவன சபைக்கு யாழ்பாணக் கல்லூரியின் பழைய மாணவரும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் மற்றும் உடுவில் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஷிராணி மில்ஸ் ஆகியோரையே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நியமித்துள்ளார். (ம-27)

# குடத்தனையில் நேற்று திடீர் சுற்றிவளைப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு குடத்தனை மாளிகைத்திடல் கிராமத்தில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொலிஸார், இராணுவம், மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும், எவரும் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் அண்மைக்காலமாகப் பரவலாகச் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-66)

# 246,000 ரூபாவுக்கு ஏலம்போன மாம்பழம்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணம் புத்தூர் கலைமதி ஆலடி முருகன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழாவின் ஐந்தாம் நாள் மாம்பழத் திருவிழாவில் ஏலம் விடப்பட்ட மாம்பழம் ஒன்று 2 லட்சத்து 46 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனையாகியுள்ளது. (ம-27)

# நாய் படுகொலை கைதானார் பெண்

கிளிநொச்சி, ஜன. 28

மாங்குளம் பகுதியில் நாய் ஒன்று தூக்கிலிடப்பட்டு கொலை செய்யப்பட்டதாக சமூக வலைதளங்களில் பகிரப்பட்டுவரும் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பகுதியில் கடந்த சனிக்கிழமை நாயொன்று மரத்தில் தூக்கிலிடப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளது. நாய் கொலை செய்யப்பட்ட புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பகிரப்பட்டு வந்தது டன் அதற்கு எதிராகப் பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-இ)

# பேராசிரியர் ரகுராம் மீது அவதூறு: மாணவர் ஒருவருக்கு வகுப்புத்தடை

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் ரகுராமுக்கு எதிராக பாரதூரமான அவதூறுகளை ஏற்படுத்திய குற்றத்துக்காக பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு வகுப்புத்தடைவிதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மாணவர்களின் போராட்டத்தில் கலந்துகொண்டு, பீடாதிபதி ரகுராமுக்கும், கலைப்பீட நிர்வாகத்துக்கும் எதிராகக் கருத்துத் தெரிவித்தமை தொடர்பிலேயே இந்த வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-125)


## கண்ணீர் அஞ்சலி



அமரர்

நாகலிங்கம் பஞ்சாட்சரம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வினோ நகைப்பூங்கா
உரிமையாளரும், ஊழியர்களும்.

தோற்றம் 05.03.1939 — மறைவு 25.01.2025

(CS/57345) J-1

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 17 . 10 . 1955 — இறப்பு 09 . 02 . 2024

அமரர் மார்க்கண்டு தனபாலன்

(முன்னாள் இ.போ.ச ஊழியர்)

திதி : சதுர்த்தசி (28.01.2025)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும் எங்கள்
கண்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
நீங்கள் மீளாத் துயில்
கொண்டு ஓராண்டு ஆனதப்பா
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

குடும்பத்தினர்

871, கைலாயபிள்ளையார் வீதி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

(CR/44190) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 04 . 1938 — மறைவு 24 . 01 . 2025

தம்பிப்பிள்ளை காசிலிங்கம்

(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர், காகித தொழிற்சாலை, வாழைச்சேனை)

இருபாலை கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு மற்றும் சுதுமலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை காசிலிங்கம் அவர்கள் கடந்த (24.01.2025) வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை-பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னம்மா (தங்கரத்தினம்) தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்புச் சகோதரரும் கோகுலன் (கண்ணன்-Autralia), ஶ்ரீரங்கன் (மணி-Uk), காலஞ்சென்ற நந்தகோபன், யசோதா (Uk), நந்தகோபி (சித்தமருத்துவர், காரைநகர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலோஜினி (Autralia), ஜெயகீதா (Uk), காலஞ்சென்ற பிரபாகரலிங்கம் மற்றும் ஜெயரூபன் (வலிகாமம்,கல்வி வலயம், மருதனார்மடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரணதி, சஜித், டிரூஸ், ஸதுரி, ஸயுதீ ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
கண்ணன்- +61 423 049282
மணி-+44 784 6580615
கோபி- 077 711 0695
ரூபன்- 077 137 6574

(CS 2390) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 04 . 1927

மறைவு 25 . 01 . 2025

**டானியல் பூரணம்**

மல்வம் உடுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட டானியல் பூரணம் அவர்கள் கடந்த 25.01.2025 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டானியல் அவர்களின் அன்பு மனைவியும் வைரவி, லட்சுமி, சரவணை, ஞானம்மா, இராசப்பு, முத்தம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செபரட்ணம், குணரட்ணம், நவரட்ணம், ஜெயரட்ணம், தவநாயகி, விஜயரட்ணம், பிறேமாறூபி ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகமலர், தவராணி, கொன்சீலியா (மணி), லூட்ஸ் செல்வராணி (பிறேமா), செல்வராஜா, லூட்ஸ் நெக்சிடா (வானதி), ஆனந்தபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் நடைபெற்று திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
076 830 0904
075 075 7334

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 2386) P-1

## விண்ணவரோடு மகிழ்ந்து 31ம் நாள்



பிறப்பு 15 . 04 . 1960

இறப்பு 29 . 12 . 2024

**எமிலியானஸ்பிள்ளை நித்தியானந்தராஜா**

(முன்னாள் சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க களஞ்சிய பொறுப்பாளர்)

"நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும் கடவுளிடம் இருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் எமக்குண்டு"

கண்கலங்காமல் காத்த தெய்வம்
கண்களை கண்ணீரால் கடலாக்கி
கண்காணா விண்ணுக்கு காவியமானீரோ
கனவிலும் உங்கள் நினைவுகள்
கலையாது என்றும் உங்கள் உறவுகள்
கவலைகள் ஓயவில்லை.
காணாத எங்கள் குல விளக்கை நினைத்து

குடும்பத்தினர்.

(CS/2384) J-1

### வெடிப்பு!

பாகிஸ்தானில் எரிவாயு ஏற்றிச் சென்ற லொறி வெடித்துச் சிதறியதில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

### அம்பலம்!

தென்கொரியாவில் கடந்த டிசெம்பர் மாதம் விபத்துக்குள்ளான பயணிகள் விமானம், பறவை மோதியே விபத்துக்குள்ளானதாகபுலனாய்வுத் துறையினர் அறிக்கையிட்டுள்ளனர். (ம)

### எதிர்ப்பு!

கிறீன்லாந்து தீவை ஆக்கிரமிக்கும் அமெரிக்காவின் முயற்சிக்கு டென்மார்க் பிரதமர் மெட்டே கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார். (ம)

## மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் நாகேந்திரன்

(ஓய்வு பெற்ற திவீர் சாலைப் பரிசோதகர், இ.போ.ச-கோண்டாவில் )



பிறப்பு 03.07.1956

இறப்பு 27.01.2025

2ம் ஒழுங்கை தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நாகேந்திரன் அவர்கள் நேற்று (27.01.2025) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு சுப்பிரமணியம்- அன்னலச்சுமி தம்பதியரின் அன்பு மகனும் இரத்தினபூபதி (ஓய்வு நிலை ஆசிரியர், யா/ மீசாலை வீரசிங்கம்.ம.க) அவர்களின் அன்புக் கணவரும் நிரோஜன் (கட்டட முகாமையாளர் அமெரிக்கா), ஆஷாயினி (மக்கள் வங்கி சாவகச்சேரி), தஷாயினி (விரிவுரையாளர், தென்கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற மகேந்திரனின் அன்புச் சகோதரனும் மாதங்கி (மென் பொறியியலாளர்,அமெரிக்கா), சசிபாலன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தென்மராட்சிக் கல்வி வலயம்), சஜீவன் (பொறியியலாளர்), ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்சயன், ஆத்யன், அபிஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (28.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 44192) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலங்காவின்...

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவினர்களுக்கான சங்கத்தினர் இது தொடர்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது:-

காணாமலாக்கப்பட்ட எமது உறவினர்களுக்கு நீதிகோரி பல வருடங்களாக நாங்கள் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்திவருகின்றோம். ஆனால், இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எமது உறவுகள் காணாமலாக்கப்பட்ட நிலையில், அவர்களைத் தேடியலைந்த 300க்கும் அதிகமான தாய்மார் உயிரிழந்துவிட்டனர். இறுதிவரை அவர்களால் தமது பிள்ளைகளைக் காணவேமுடியவில்லை. ஆனால், 'தீர்வு தருகின்றோம்' என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசுகள் ஒவ்வொன்றும் எம்மைத் தொடர்ச்சியாக ஏமாற்றியேவருகின்றன.

தற்போதைய அரசாங்கமும்கூட காணாமலாக்கப்பட்ட உறவுகளின் விடயத்தில் மெத்தனப் போக்குடன் செயற்படுகின்றது. எனவே, காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதிகோரியும், உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தியும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியை கரிநாளாகக் கடைப்பிடிக்க முன்வருமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம். அன்றையதினம் வடக்கு - கிழக்கில் இடம்பெறும் போராட்டங்களில் கலந்துகொள்ளுமாறு பொதுமக்களை நாம் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம் - என்றனர். (அ-ம-125-20)

## பிரிட்டன்...

மணியளவில் இடம்பெறும் சந்திப்பில் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரை அமைச்சர் கேத்ரின் சந்திக்கவுள்ளார்.

பிரிட்டனிலும், இலங்கையிலும் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டதன் பின்னர் பிரிட்டன் இராஜதந்திரி ஒருவர் இலங்கைக்கு வருகைதரும் முதலாவது சந்தர்ப்பமாக இது அமைந்துள்ளது. மனித உரிமைகள், நல்லிணக்கம், காலநிலை நெகிழ்வுத்தன்மை மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் ஆகியவற்றை மையப்படுத்தியே அமைச்சர் கேத்ரின் வெஸ்டினின் சந்திப்புக்கள் அமையும் என்று பிரிட்டன் தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது பயணம் தொடர்பில் அமைச்சர் கேத்ரின் வெஸ்ட் தெரிவித்ததாவது:-

இலங்கையில் புதிய அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் எனது முதலாவது உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு அவர்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இலங்கையை பூர்வீகமாகக்கொண்ட பிரிட்டனில் வாழும் மக்களிடம் இருந்து இலங்கை தொடர்பில் நான் நிறையவே அறிந்திருக்கின்றேன். அவர்களின் அன்பையும் விருந்தோம்பலையும் நான் தனிப்பட்ட ரீதியில் அனுபவித்திருக்கின்றேன். இலங்கையும் பிரிட்டனும் துரிதமானதும் நவீனமானதுமான பங்காளராக தமது இணைப்பை பகிர்ந்துகொள்கின்றன - என்றார். (அ-ம-125)

## போதையை...

போதைப்பொருளுக்கு எதிரான போராட்டத்தை சமூகமயப்படுத்த வேண்டிய பொறுப்பு எங்கள் அனைவருக்கும் உள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் ரகுராம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் நேற்று சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் உள்ளதாவது:-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தில், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனையைத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருப்பவனாக, இன்று கலைப்பீட மாணவர் ஒன்றியம் ஆரம்பித்திருக்கக்கூடிய போதைப் பாவனைக்கு எதிரான போராட்டத்தை முழுமையாக ஆதரித்து நிற்பவனாக, சமூகத்திடம் ஒரு தாழ்மையான வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகின்றேன்.

போதைப்பொருள் பாவனை இன்று எங்கள் மக்களை அனைத்து விதத்திலும் பாதித்திருக்கின்றது. பல்கலைக்கழகங்கள் மட்டும் இல்லை, பாடசாலைகள், சமூக நிறுவனங்கள், இவை யாவற்றிலும் இன்றைக்கு ஊடுருவிப் போயிருக்கின்ற இந்தப் போதைப்பாவனை எங்களுடைய சக்திமிக்க இளம் சமுதாயத்தைச் சீரழித்துக்கொண்டிருக்கின்றது.

மதுவாக, போதைப்பொருளாக பல்வேறு வடிவங்களில் ஊடுருவிக்கொண்டிருக்கக்கூடிய இந்தப் பாவனை சுயமாக சிந்திக்கக்கூடிய எங்கள் சமூகத்தை மிக அசிங்கமான வழியிலே சீரழித்துக் கொண்டிருக்கின்றது. பல சக்தி மிகுந்த நம்பிக்கை தரக்கூடிய, இந்த உலகத்தையே மாற்றியமைக்கக்கூடிய மாணவர்கள் இந்த போதைப் பாவனைக்கு ஆளாகிவருகின்றனர். பாடசாலைகள் இந்தப் போதைப் பாவனையைத் தடுத்து நிறுத்தமுடியாது திகைத்து நிற்கின்றன. ஆசிரியர்கள் இந்தப் போதைப் பாவனையில் இருந்து மாணவர்களை மீட்டெடுப்பதற்கான வழிவகைகள் தெரியாமல் விழி பிதுங்கி நிற்கின்றார்கள்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை எப்படி இந்தப் போதைப் பாவனையில் இருந்து காப்பது எனத் திகைத்து நிற்கின்றார்கள். இந்த மண் ஒழுக்க சீலர்களை போதைப் பாவனையற்ற எங்களுடைய இளம் குருத்துக்களை உருவாக்குகின்ற மண். மாவீரர்களுடைய தனி மனித ஒழுக்கமும், போதைப் பாவனையற்ற அந்தச் சூழலும்தான் இன்றைக்கும் அவர்களை முன்மாதிரிகளாகவும் தெய்வங்களாகவும் போற்றிவைத்திருக்க எங்களைப் பணித்திருக்கின்றது.

அந்தச் சூழலில் இருந்து இன்றைக்கு எமது சமூகம் வெகுதூரம் தொலைந்திருக்கின்றது. இந்தச் சமயத்தில் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்திருக்கின்ற பல்கலைக்கழக மாணவர்களால் குறிப்பாக கலைப்பீட மாணவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இந்தப் போதைக்கெதிரான போராட்டம் ஒரு சமூகப் போராட்டமாக உருவாகவேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு சமூக நிறுவனங்களிலும் இருக்கக்கூடியவர்கள், அக்கறை உள்ளவர்கள், ஆர்வம் உள்ளவர்கள் தயவுசெய்து இந்தத் தருணத்தை எங்களுக்காக ஒதுக்கி எங்களுடைய இளம் சமுதாயத்தை நாசமாக்கிக் கொண்டிருக்கக்கூடிய இந்தப் போதைப் பொருளைத் துடைத்தெறியப் பொறுப்பேற்கவேண்டும். பெரிய விழிப்புணர்வை, மிகப்பெரிய ஒரு செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டிய காலகட்டம். அந்தச் செயற்பாடுதான் எங்களை சுதந்திர சிந்தனையாளர்களாக, சுயாதீனமாகச் சிந்திக்கக்கூடியவர்களாக, இந்த சமூகத்தை வழிநடத்தக்கூடியவர்களாக எங்களுடைய வளர்ந்துவரும் இளம் சமுதாயத்தை உருவாக்குவதற்கு அது வழிதரும்.

என்னுடைய இந்த வேண்டுதலைச் செவிமடுத்து உங்களுடைய ஒவ்வொரு பிள்ளைகளையும் இந்தப் போதைப் பழக்கத்தில் இருந்து விடுவித்து எங்களுடைய சமூகத்தை ஆரோக்கியமான சமூகமாக உருவாக்க, எங்களுடைய சமூகத்தையும் ஒரு முன்மாதிரியான சமூகமாக உருவாக்க திடசங்கற்பம் பூணுவோமாக - என்று தெரிவித்துள்ளார். (அ-ம)

## பல்கலை...

உருவாக்கிப் பிரச்சினையை மடைமாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பீட ஒன்றியங்களில் இருந்தே பிரதான மாணவர் ஒன்றியத்துக்கு பிரதிநிகள் தெரிவுசெய்யப்படவேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் இருந்தவர்களின் கல்வியாண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆதலால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தற்போது இயங்கு நிலையில் இல்லை. இவ்வாறிருக்கையில், 'அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம்' என்ற பெயரில் அவசரஅவசரமாக ஒரு போலியான அமைப்பை உருவாக்கி, அதன்மூலம் பல்கலைக்கழக விவகாரங்களை மடைமாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்த அமைப்பு, இதுவரை எந்தவொரு பதிவும் இல்லாத அமைப்பு என்பதுடன், முழுக்க முழுக்க சட்டவிரோதமாக உருவாக்கப்பட்ட அமைப்பு என்றும் பல்கலைக்கழக வட்டாரங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-ம-125)

## மயக்கமருந்து...

வீடொன்றுக்கு சோலர் திருத்துவதற்காகச் சென்றவர்கள் போன்று தம்மை அடையாளப்படுத்திய இருவர் மயக்க மருந்தை விசிறிவிட்டு இந்தக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

## வடக்கில்...

வடக்கு மாகாணத்தில் நாளை (இன்று) கடும் மழை பொழிவதற்குச் சாத்தியங்கள் காணப்படுகின்றன. அத்துடன், ஊவா மற்றும் தென் மாகாணங்களிலும் அம்பாறை, மட்டக்களப்பு, மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் - என்றுள்ளது. (அ-ம)

## தமிழ்க்...

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று மாலை இந்தக் கலந்துரையாடல் நடைபெறுவதாக இருந்தது. எனினும், தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைத் தொடர்புகொண்டு, பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதியன்று இடம்பெறும் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் கலந்தாலோசித்த பின்னரே இந்த நடவடிக்கைகள் தொடர்பில் தமிழரசுக் கட்சியின் இறுதி முடிவை அறிவிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்தே, நேற்று மாலை நடைபெறவிருந்த தமிழ்த்தேசியக் கட்சிகளின் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை அவதானித்த பின்னர், அடுத்தகட்ட நடவடிக்கைகளைத் தொடர்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## வாகன...

அமையவே வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்த காலத்தில், டொலரின் இருப்பைத் தக்கவைக்கும் வகையில் வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஜனாதிபதியாக அநுர பொறுப்பேற்ற பின்னர், கட்டம் கட்டமாக வாகன இறக்குமதியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுவந்தார். இதன் தொடர்ச்சியாகவே, இன்றுமுதல் வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ-ம)

## 68 லட்சம்...

லட்சம் ரூபாவை அந்த ஆசிரியர் மோசடியாகப் பெற்றார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே அந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார். அவர் நேற்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றத்தில் வைத்து தான் பெற்ற பணத்தைத் திரும்ப வழங்கியுள்ளார். இதையடுத்தே அந்த ஆசிரியர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (அ-ம-26)

## ஹெரோய்னுடன்...

மற்றும் 4 கிராம் ஹெரோய்ன் என்பன மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர் அரசியற் கட்சி ஒன்றுக்கு மிகவும் நெருக்கமானவர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

## ஆட்சி...

ராஜபக்ச நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டார். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியற்பழிவாங்கலுக்காகவும், குடும்பத்தைப் பழிவாங்கவும் அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது. சட்டத்தை செயற்படுத்துவதில் பிரச்சினை இல்லை. ஆனால் சிலரை இலக்குவைத்து செயற்படுவத்துவதில்தான் பிரச்சினை உள்ளது.

எதிரணியை ஒடுக்கித் தமது அரசியல் பயணத்தை முன்னெடுப்பதற்கே தற்போதைய அரசாங்கம் முயல்கின்றது. நாம் தவறிழைத்திருந்தால் நீதிமன்றம் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கட்டும். அதைவிடுத்து அரசாங்கம் ஊடகக் கண்காட்சியை நடத்தக்கூடாது. இந்த அரசுக்கு மக்கள் ஐந்தாண்டுகள் ஆணை வழங்கியுள்ளனர். எனவே, பலவந்தமாக ஆட்சியை மாற்றமுடியாது. தேர்தல் ஊடாகவே அது நடக்கும். அத்துடன், அரசியற் பழிவாங்கலுக்கு எமது ஆட்சியில் முடிவு கட்டப்படும்' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெப்ரவரி 17ஆம் திகதியன்று

# நாட்டின் பயணத்திசையை பட்ஜெட்டில் காண்பிப்போம்

ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 28

பெப்ரவரி மாதம் 17ஆம் திகதி நாம் வரவு - செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிப்போம். அதன்மூலம் நாடு திரும்ப வேண்டிய திசையை நாம் காண்பிப்போம் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு சரியான திசையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. காரணம் கடந்த பல தசாப்தங்களாக அரசாங்கங்கள் பரம்பரை பரம்பரையாக தோற்றம் பெற்றது. எனினும் இலங்கையில் முதற்தடவையாக பரம்பரையற்ற அரசாங்கம் ஒன்று உருவாகியுள்ளது.

சில சந்தர்ப்பங்களில் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு அரசாங்கங்கள் உருவாகின. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மக்கள் தொடர்பில் எமக்கு பொறுப்பும் இணைப்பும் உள்ளது - என்றார். (ம-இ)


## வேலையாட்கள் தேவை

மிருசுவில் கொடிகாமத்தில் அமைந்துள்ள **Rohana Hotel** இற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. **சமையலாளர்** - 01
2. **வரவேற்பாளர்** - 02

**தொடர்பு:**

**077 6218 344**

(CS 23388) A

## வேலையாட்கள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. (உணவு பரிமாறுபவர், தேநீர் தயாரிப்பாளர் உணவு பொதி செய்பவர்) (Waiter Tea Maker Parcel) தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:**

**076 193 0545**

(CS 2387) V-1

## பண்ணை வேலைக்கு ஆட்கள் தேவை

- பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 19 - 45 வயதுடைய தேகஆரோக்கியமுள்ள ஆண் வேலையாட்கள் வேலைக்குத் தேவை.
- ஆடு, மாடு மேய்த்தலில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- போதைப் பழக்க வழக்கம் அற்றவர்கள் மட்டும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

இடம் :- கெற்பேலி மத்தி, மிருசுவில்

(CS/57166) J-1

**076 200 1700**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 21 . 11 . 1935 | 28 . 01 . 2024 |

### மலக்கியாஸ் அன்னம்மா (லீலாவதி)

அன்பான உங்கள் வார்த்தைகளும், பாசமான உங்கள் அன்பும், என்றும் எங்கள் நினைவை விட்டு அகலாதம்மா - நிலையான சாந்தியும், சமாதானமும் பரகதியில் நிறைவாக கிடைக்க எங்கள் மன்றாடுகளும் பிரார்த்தனைகளும்.

**உங்கள் ஆன்மா இளைப்பாற்றிக்காக மன்றாடும்
பாசமுள்ள பிள்ளைகள், பெறாமக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
அன்புச் சகோதரி மற்றும் அன்புள்ள மச்சான் மார்கள்.**

125/2, 2ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

(CS/28925) J-1

குடும்பத்தினர்
+164 7857 8738

# மரண அறிவித்தல்

## நடராசா மகேஸ்வரி



துரைவீதி இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மகேஸ்வரி அவர்கள் கடந்த 24.01.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சின்னத்தங்கச்சி தம்பதிகயின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-மீனாம்பாள் தம்பதியின் மூத்த மருமகளும், நடராசாவின் (ஓசியர் கலகா) அன்பு மனைவியும், தாட்சாயினி, கஜாயினி ஆகியோரின் அன்புத்தாயாரும், குகதாஸ், கதிர்காமநாதன் ஆகியோரின் மாமியாரும், பிரணாத், றயித், கபிலாஸ் தட்ஷினா, லுக்சிதா ஆகியோரின் பேர்த்தியும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம், குலசிங்கம், இலங்கைநாதன், காந்தராயா மற்றும் இரத்தினமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அருமைநாயகி மற்றும் சகுந்தலாதேவி, குலசிங்கம், கதிர்காமசேகரம், சாரதாதேவி, விக்கினேஸ்வரன், ராசலட்சுமி, இந்திரலீலா, கிருஷ்ணலீலா, பிரேமலதா, ஜெயலக்ஸ்சுமி, அன்னபூரணம், பேரின்பமணி, ராகினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02.06.1948 | 24.01.2024 |

துரைவீதி,
இணுவில் தெற்கு

(CS 57347) V-1

தகவல்:
குடும்பத்தினர்

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org